செ.வெ.எண் 03 நாள்: 06.05.2019

**பெரம்பலூர் மாவட்டம்**

**தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) மாணவர்கள் சேர்வதற்கு 31.05.2019 வரை விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.வே.சாந்தா,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

**இதுகுறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது:**

2019-ஆம் ஆண்டில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரவும் அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் அரசு ஒதுக்கீட்டு இடங்களில் மாணவர்கள் சேர்ந்திடவும் மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைகளுக்கு www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம். இவ்விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் விண்ணப்பங்கள் வந்துசேரவேண்டிய கடைசிநாள் **31.05.2019** ஆகும்.

மதிப்பெண் அடிப்படையில் நடைபெறும் மாவட்ட கலந்தாய்வுக்கான தரவரிசை பட்டியல் மற்றும் கலந்தாய்வு நடைபெறும் நாள், தேதி, இடம் உள்ளிட்ட விபரங்கள் இதே இணையதளத்தில் வெளியிடப்படும் மேலும் இணையதள விண்ணப்பத்தின் போது தெரிவிக்கப்பட்ட அலைபேசி எண்ணிற்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். இணையதளத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எந்தெந்த தொழிற்பயிற்சி நிலையங்களில் மாவட்டகலந்தாய்வு நடைபெறும் என்றவிபரம் தரப்பட்டுள்ளது. கலந்தாய்வு நடைபெறும் நாளில் மாணவர்கள் **Single Window** முறையில் தாங்கள் சேரவிரும்பும் தொழிற்பிரிவு மற்றும் தொழிற்பயிற்சி நிலையம் ஆகியவற்றை மாவட்ட கலந்தாய்வில் கலந்துகொண்டு தேர்வு செய்யலாம்.

இது குறித்துமேலும் விபரங்கள் www.skilltraining.tn.gov.in என்ற இணையதளம் மூலமோ, தங்களுக்கு அருகாமையில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்களைத் தொடர்பு கொண்டோ விபரம் பெறலாம். மேலும், 9499055881, 9499055883 என்ற தொலைபேசி எண்ணிலோ, gitiperambalur@gmail.com என்ற இணையதள முகவரியிலும் தொடர்புகொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், பெரம்பலூர்.